விமர்சனம் - 30

## யுத்தத்துடன் முடிவடையாத தணிக்கை

பாடசாலைக் கல்வி தொடர்பாக கலவரமடையச் செய்யும் செய்திகளும் கவலையளிக்கும் செய்திகளும் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை கடந்த சில வாரங்களாக ஊடக ஆய்வை மேற்கொண்ட போது காணக்கூடியதாகவிருந்தது. ஒரு புறம் வடக்கில் இடம்பெயர்ந்த மாணவ மாணவிகள் பெரும் மழை காரணமாக தமது மலசலம் கலந்த வெள்ளத்தில் இருந்தவாறு கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இப்போது நடைபெறும் உயர்தரப் பரீட்சைக்கும் தோற்றி வருகின்றனர். அவர்கள் எந்த நிலையில் இருந்து கொண்டு பரீட்சை எழுதுகின்றனர் என்பதை எவரும் கவனத்தில் கொள்ளாத போதும் தென்பகுதி கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள கலவர நிலை ஊடகங்களில் விஷேட கவனத்தைப் பெற்றுள்ளது. பல்வேறு நபர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் குரல் எழுப்புவதற்கு இலக்காகியுள்ளது. எப்படியிருந்தும் வடமத்திய மாகாணத்தில் கேள்வித் தாள்கள் தொடர்பாக பாராளுமன்றத்திலும் கூட பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. பரீட்சைகளுக்கு கேள்வித் தாள்கள் பிந்திக் கிடைத்தது, குறைந்தளவு கிடைத்தது போன்ற பிரச்சினைகள் வழமையை விட அதிகமாக ஏற்பட்டதுடன் இம்முறை உயர்தரப் பரீட்சையிலும் இது போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதை ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்திகள் மூலம் காணக்கூடியதாகவுள்ளது. அதிபர்களை சேர்த்துக் கொள்வதற்காக நடைபெற்ற பரீட்சையில் புள்ளிகள் பெற்றவர்களை புறக்கணித்து நடைபெறவிருந்த முறைகேடுகளுக்கு தீர்வாக சட்டத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. இருந்தும் அந்த நடைமுறையிலும் கூட கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு நியாயம் கிடைக்காத நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்ததை கேள்விப்படக் கூடியதாகவிருந்தது. இதற்குக் காரணம் ஒரு நாள் மாத்திரம் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் நியாயம் பெற்றுக் கொடுக்க முயற்சித்தமையேயாகும்.

எப்படியிருந்தும், இரண்டு பாடசாலைகளின் மாணவ மாணவிகள் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தது மற்றும் மூவர் மரணமடைந்தது ஆகிய சம்பவங்கள் கவலையையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இந்த இரண்டு சம்பவங்களை அறிக்கையிடும் போதும் சில ஊடகங்கள் வேறு விதமாக செய்தி வெளியிட்டதை காணக்கூடியதாகவிருந்தது. பின்னர் பெயர், ஊர் ஆகியன வெளிவந்தாலும் கொழும்பு சம்பவம் தலைநகரில் தனியார் மகளிர் பாடசாலையொன்றில் இடம்பெற்ற சம்பவமாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் கிராமப் பாடசாலை சம்பவம் பெயர், ஊர் விவரங்களுடன் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இந்த வேறுபாட்டை ஒரு வார இறுதிப் பத்திரிகை ஆய்வு செய்திருந்தது. மனிதாபிமான செய்தி அறிக்கையிடலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் எமது பத்தி இச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏனென்றால் இச்சம்பவம் மூலம் எடுக்க முயற்சிக்கும், எடுத்துள்ள முடிவுகளிலும் மனிதாபிமானத்துக்கு சம்பந்தப்பட்டதாகவும் அதேபோல் ஏனைய சகல கருத்துகளை தெரிவிப்பதற்கும் எச்சரிக்கை விடுப்பதாக இருப்பதாலேயே.

“பாடசாலை பிள்ளைகளின் நன்மைக்கென கூறி முயற்சிக்கும் இத்தீர்மானங்கள் எங்கே மட்டுப்படுத்தப்படும்? இதன் மூலம் இந்நாட்டு மக்கள் எவ்வாறான நிர்வாக முறைக்கு இட்டுச் செல்லப்படுவர்?” போன்ற விடயங்கள் குறித்து இந்நாட்டு ஊடகங்கள் மக்களை தெளிவுபடுத்தும் கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட்டுள்ளதா என்ற விடயம் இங்கு எமது ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.

கடந்த ஜுலை மாதம் 27ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி வரையிலான ஒருவார காலப் பகுதிக்குள் கொழும்பு பிரதான தனியார் பாடசாலையொன்றின் மாணவியொருவர் கழுத்துப் பட்டியால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் மற்றும் பொலன்னறுவை பாடசாலையொன்றின் மாணவ மாணவிகள் நச்சுக் கொட்டைகளை சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஆகியன குறித்து ஊடகங்கள் முக்கியத்துவமளித்திருந்தன. இச்சம்பவங்களை அறிக்கையிட ஊடகங்கள் பொதுவாக சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தன. இருந்தும் இக்கொடூர சம்பவத்துக்கு பின்னணியான பாடசாலை நிர்வாகம் மற்றும் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையிலான புரிந்துணர்வற்ற தன்மையை முன்னிலைப்படுத்தி ஆசிரியர்களின் பொறுப்புகள் குறித்த கருத்துப் பரிமாறல்களை கட்டியெழுப்புவதற்குப்

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

பதிலாக அரசின் தீர்மானங்களை நியாயப்படுத்தும் விதத்தில் ஊடகங்கள் நடந்து கொள்வதைக் காணக்கூடியதாகவிருந்தது. பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் செல்லிடத் தொலைபேசி பாவனையை தடை செய்வது தொடர்பான செய்தி மற்றும் இது தொடர்பாக மக்களின் கருத்துகள், பாலியல் தொடர்பான 12 இணைய தளங்களை தடை செய்தது, வயது வந்தோருக்கான திரைப்படங்களை தடை செய்தமை இச்சம்பவங்களின் பின்னரான அதிரடி நடவடிக்கைகளாகும். சிங்களப் பத்திரிகைகளில் இச்சம்பவங்கள் தொடர்பான செய்திகள் / கட்டுரைகள்/ ஆசிரியர் தலையங்கம், கேலிச் சித்திரங்கள் என 57 ஆக்கங்கள் வெளிவந்திருந்ததுடன் ஆங்கிலப் பத்திரிகைகள் இது தொடர்பான 27 ஆக்கங்களை வெளியிட்டிருந்தன. தமிழ்ப் பத்திரிகைகளில் இது தொடர்பான 11 ஆக்கங்கள் வெளிவந்திருந்தன. தொலைக்காட்சி ஊடகங்கள் இச்செய்தி மற்றும் தடை உத்தரவு தொடர்பான 27 செய்திகளை ஒளிபரப்பின. வானொலி சேவைகள் சம்பந்தப்பட்ட காலவரையறைக்குள் 7 செய்திகளை ஒலிபரப்பின. அரச ஊடகங்கள் சம்பவம் மற்றும் அரசின் தடை உத்தரவை நியாயப்படுத்தும் செய்திகளுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டிருந்ததுடன் சில தனியார் ஊடகங்கள் இத்தடை உத்தரவின் சாதக பாதகங்கள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொள்ள முயற்சி மேற்கொண்டிருந்தன. விஷேடமாக சில ஞாயிறு பத்திரிகைகளில் இச்சம்பவங்கள் தொடர்பாகவும் வயது வந்தோருக்கான திரைப்படங்களை தடை செய்ததை கேலிக்குட்படுத்தி கருத்துக்களை முன்வைக்கும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. சில நாளாந்தப் பத்திரிகைகள் கேலிச் சித்திரங்கள் மூலம் இத்தீர்மானங்களை கேலி செய்திருந்தன. மனிதாபிமான செய்திகளை அறிக்கையிடும் போதும் செய்திகளை மாத்திரம் வெளியிடுவதன்றி அதன் எதிர்கால நோக்குகளை எழுதாத தமிழ் பத்திரிகைகள் இச்சம்பவம் தொடர்பாகவும் அதே வழிமுறையை பின்பற்றியிருந்தன. இருந்தும் பல்வேறு மூலங்களைத் தேடி தமிழ் மக்கள் தொடர்பான சம்பவங்களின் பாதிப்பை எடுத்துக்காட்டும் முயற்சிகள் இச்சம்வங்கள் விடயத்தில் மேற்கொள்ளப்படாததை காணக்கூடியதாகவிருந்தது.

செல்லிடத் தொலைபேசியை அரசு தடைசெய்யாமலிருந்தாலும் மாணவி காவிந்தி தற்கொலை செய்து கொண்டது பாடசாலைகளில் அது தடை செய்யப்பட்டிருந்ததாலேயே. இச்சம்பவத்தின் பின்னணியில் மறைந்திருக்கும் இரகசியங்களை வெளிப்படுத்தி பாடசாலைகளின் நிர்வாக நிலையை எடுத்துக்காட்டும் சந்தர்ப்பம் ஊடகங்களுக்கு கிடைக்காமற் போய்விட்டது. உலகம் தொலைதொடர்பு தொழில்நுட்பத்தில் அபரித முன்னேற்றம் கண்டுள்ள காலகட்டத்தில் ஆசிரியர்களுக்கும் இதை தடைசெய்யப்பட்ட பொருளாகியிருப்பதை நியாயப்படுத்துவது போல் சமூகமும் மௌனம் சாதிக்கின்றது. கற்பிக்கும் நேரத்தில் இதைப் பாவிப்பது இடையூறாகவிருக்கும். இருந்தும் இலங்கையில் சகல தொழிலாற்றும் துறைகளிலும் இத்தடை விதிக்கப்படமாட்டாதென்பதற்கு என்ன உறுதி? “வயது வந்தவர்களுக்கு மட்டும்” என்ற முத்திரை ஒரு திரைப்படத்துக்கு குத்தப்படுவது அதை சிறுவர்கள் பார்க்கக் கூடாது என்பதற்காகவே. அவற்றை வயதுவந்தவர்களுக்கு தடை செய்யும் கேலிக் கூத்தான, கேலியுடன் நின்றுவிடும் முறையான நிர்வாகத்துடனான சமூகத்திலா நாம் வாழ்கின்றோம்? கலைத்துறையினர் கிளர்ந்தெழ வேண்டிய இச்சந்தர்ப்பத்தில் எப்போதாவது ஒருவர் நழுவல் போக்கில் தமது தயாரிப்பின் மட்டத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் விதத்திலான சிறு அறிக்கைகள் ஒன்றிரண்டை இக்காலப் பகுதிக்குள் காணக்கூடியதாகவிருந்தது. வயது வந்தோருக்கு மட்டும் என்ற முத்திரையின் கீழ் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை உருவாக்கியவர்கள் அவற்றிற்கு பங்களிப்புச் செய்தோர், அவற்றிற்கு விருதுகளை வழங்கியோர் இன்று இது குறித்து குரலெழுப்பாதது ஏன்? அவர்களின் படைப்புகளுக்கான யுகம் முடிவடைந்து விட்டதாலா? இல்லாவிட்டால் அவர்களது குரல் ஊடகங்களுக்கு கேட்காததாலா? மனிதாபிமான செய்திகள் / யுத்த செய்திகளை அறிக்கையிடும் போதிருந்த தணிக்கை அரசு சகல மூலதர்மவாத தீர்மானங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படுவதாலா? சிவில் சமூகம், புத்தி ஜீவிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கிடையில் சிறந்த தொடர்புகளை கட்டியெழுப்பக்கூடிய ஊடகங்களுக்கு இலங்கை சமூகத்தை இந்த தவறான வழியிலிருந்து மீட்டெடுக்கும் வழிகாட்டியாக விளங்க முடியும். இருந்தும் இத்தொடர்புகளை கட்டியெழுப்புவதற்கான குரல் இதுவரை ஊடகங்களின் மூலம் கேட்கவில்லை.

**சீதா ரஞ்சனி**

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com

**seetha@cpalanka.org**

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com